தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆவணி 7, பிரமோதூத—திருவள்ளுவர் ஆண்டு 2021

1990 ஆகஸ்ட் 23, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க்குடி மகன் அவர்கள் தலைமையில் காலை 9.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை ''

மற்ற உயிர்களின் துன்பத்தைத் தம் துன்பம்போல் கருதிக் காப்பாற்றாவிட்டால் நாம் பெற்றுள்ள அறிவினால் ஆகப் போகும் பயன்தான் என்ன?

1. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 2244, 2580, 5215, 9336 மற்றும் 9656 ஆகியவை சுற்றுப் பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்.

சாலையோர சிற்றுண்டி விடுதிகள்

* 5208—திரு. இரா. சாமிநாதன் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தினரால் நடத்தப் பெற்று வரும் சாலையோர சிற்றுண்டி விடுதிகளை (Motels) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே,

ஆம்.

[1990 ஆகஸ்ட் 23

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தினுடைய பல்வேறு வழித்தடங்கள் போகக்கூடிய பாதைகளிலே இன்றைக்கு தனியார்கள் நடத்தக்கூடிய சிற்றுண்டி விடுதிகளை யெல்லாம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்கிற ஒரு கோரிக்கை அல்லது கருத்துரு நீண்ட காலமாக அரசினுடைய பரிசீலனையில் இருந்து வருகிறது என்று அறிகிறேன். இப்படி நடத்தக்கூடிய மோட்டல்கள் அல்லது சிற்றுண்டி விடுதிகள் தனியாராலே நடத்தப்படு வதற்குப் பதிலாக அவை தமிழ்நாடு அரசினுடைய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினுடைய சார்பிலே நடத்தப்படுமானால் பயணிகளுக்குப் பயனுள்ள சேவையை அளிக்க முடியும் என்கிற காரணத்தினாலே இந்தப் பரிசீலனையை விரைவுபடுத்தி, இது போன்ற சிற்றுண்டி விடுதிகளை எல்லாம் அரசுத் துறையிலேயே அல்லது அரசு நடத்தக்கூடிய கழகத்தின் மூலம் நடத்த விரை வாக அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் 5 இடங்களில் சாலையோரச் சிற்றுண்டி விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன. கொட்டாம்பட்டி, எட்டையபுரம், மூவரைவென்றான், தொழு தூர், பழனி. இந்த 5 இடங்களில் தனியார்கள் சிலருக்கு ஏற்கெனவே நடத்துவதற்காக ஒப்படைக்கப்பட்ட நிலைமையில் அவைகளை எல்லாம் உடனே காலி செய்ய முடியாமல் நீதி மன்றத்தினுடைய நடவடிக்கைகளிலே இருக்கின்ற காரணத்தால் அதைக் காலி செய்து, நம்முடைய போக்குவரத்துக் கழகமே ஏற்று அதற்குப் பின்னர் ஒப்படைப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பழனி, தொழுதூர் ஆகிய இடங் களில் மட்டும் சாலையோரச் சிற்றுண்டி விடுதிகள் ஒப்பந்தப் புள்ளி அடிப்படையில் தனியார்களிடம் உரிமத்திற்கு விடப் பட்டு நடத்தப்பட்டு வருகின்றன. நீதிமன்ற நடவடிக்கைகள் முடிந்ததற்குப் பிறகு சுற்றுலா வாரியத்திடம் இந்தச் சாலை யோரச் சிற்றுண்டி விடுதிகள் ஒப்படைக்கப்படும்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தினால் 5 இடங்களில் நடத்தப்படுகின்றன. அதிலும் இரண்டு இடங்களில் ஒப்பந்த அடிப் படையில் தனியார்களிடம் விடப்பட்டிருக்கின்றன என்று குறிப் பிட்டார்கள். குறிப்பாக, பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் சார்பிலே மாமண்டூரிலே ஒரு சிற்றுண்டி விடுதி கட்டப்பட்டும் கூட அதிலே திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தினுடைய பேருந்துகள் நிறுத்தப்படாமல் தனியார் இடங்களிலே நிறுத் தப்படுகின்றன. அப்படி மிகப் பெரும் அளவிற்கு திருவள்ளுவர் போக்குவரத்தினால் நடத்தப்படும் பேருந்துகள் முழுவதும்

1990 ஆகஸ்ட் 23]

தனியார் சிற்றுண்டி விடுதிகளிலே நிறுத்தப்படுவதனால் பயணிகளுக்குப் பெருமளவு சிரமங்கள் ஏற்படுகின்றன. எனவே, இதைத் துரிதப்படுத்தி முடிக்கவும், குறிப்பாக மாமண்டூரில் பெரியார் போக்குவரத்துக் கழக சிற்றுண்டி விடுதியைப் பயன்படுத்திக் கொள்வதற்கும் அரசு முயற்சி எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, மாமண்டூரில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் இந்த வழிப் பயணச் சிற்றுண்டி விடுதி திறக்கப்பட்டதற்குப் பிறகு எல்லாப் பேருந்துகளுமே அந்தச் சிற்றுண்டி விடுதிக்கு அருகிலேதான், அதனுடைய வளாகத்திற்குள்ளேதான் நிறுத்தப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டு இருக்கின்றது. அதையும் மீறி சில போக்குவரத்துக் கழகத்தினுடைய பேருந்துகள் தனியார் விடுதிகளுக்கு முன்னால் நிறுத்தப்படுகின்றன என்ற புகார் ஏற்கனவே அரசாங்கத்திற்கு வந்து அதன் முன்னாலே நிறுத்தப்படுகின்ற அந்தப் பேருந்து ஓட்டுநர் அல்லது நடத்துநர் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அவர்களுக்கும் எச்சரிக்கை செய்யப்பட்டதற்குப் பிறகு முழுமையாக இப்போது திருவள்ளுவர் பேருந்துகள் அல்லது மற்ற போக்குவரத்துக் கழகத்தினுடைய பேருந்துகள் மாமண்டூரிலே இருக்கின்ற மோட்டலிலேதான் நிறுத்தப்படுகின்றன. அப்படி ஏதாவது புகார்கள், நம்முடைய சட்டமன்ற உறுப்பினருக்கு நேரடியாகத் தெரியுமானால், எந்த வண்டி அந்த வளாகத்திலே போகாமல், தனியாருடைய விடுதிக்கு முன்னாலே நிறுத்தப்படுகிறது என்பதைக் குறிப்பாகச் சொன்னால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கலாம்.

9.05 மணி

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் இதுபோன்ற சாலை ஓரச் சிற்றுண்டி விடுதிகளிலே பயணிகளுக்கு குறைந்த விலையிலே, No Profit, No Loss, என்கின்ற முறையிலே தரமான உணவுப் பொருட்களை வழங்குவதற்கு அரசு ஏதேனும் உத்தரவு பிறப்பித்திருக்கிறதா? அல்லது இலாப நோக்கத்தோடு நடத்துகின்ற முறையிலே அந்த விடுதிகள் நடத்தினால், மக்களுக்குப் பயன் ஏற்படாது என்பதைக் கருத்தில் கொண்டு இனியாவது அப்படி ஒரு உத்தரவு பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, பஸ்களிலே செல்லக்கூடிய பயணிகளுக்கு தரமான, சுத்தமான உணவுகள் கிடைக்க வேண்டும். அதேநேரத்தில், நியாயமான விலையில் வழங்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான், இந்த

சாலையோரச் சிற்றுண்டி விடுதிகள் போக்குவரத்துக் கழகத்தினால் அமைக்கப்படுகின்றன. ஏற்கனவே, தனியார் உணவு விடுதிகளுக்கு முன்னால், சில இடங்களில் நம்முடைய போக்குவரத்துக் கழக பஸ்கள் இரவு நேரத்திலே நிறுத்தப்படுகிற காரணத்தினால், அவர்கள் போடுகிற விலையைக் கொடுக்க வேண்டும் ; அந்த விலைக்கு எந்த உணவு—அது தரமில்லாத உணவாக வழங்கப்பட்டாலும், அதைச் சாப்பிட்டே தீர வேண்டும் என்ற நிலையை மாற்ற வேண்டும் என்பதற்காகத்தான் இப்படிப்பட்ட உணவு விடுதிகள் அமைக்கப்பட்டு, பயணிகளுக்கு மேலும் நன்மை செய்கின்ற வகையிலே, நியாயமான விலையிலே உணவுப் பண்டங்கள் வழங்கப்படுகின்றன.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லையிலிருந்து சென்னை வருகின்ற பேருந்துகள், விழுப்புரத்தில் ‘ ஓட்டல் அபிலாஷ் ’ முன்னாலே நிறுத்தப்படுவதால், அங்கே ஆண் பயணிகளும், பெண் பயணிகளும், சாலையோரத்திலேயே சிறுநீர் கழிக்க வேண்டிய ஒரு துர்ப்பாக்கியமான நிலை ஏற்படுகிறது. அமைச்சரவர்கள் கவனித்து, தகுந்த கழிப்பிட வசதிகள் உள்ள இடங்களில் அந்தப் பேருந்துகளை நிறுத்த வகை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் தனியார் உணவு விடுதிகளுக்கு முன்னாலே நிறுத்தப்பட்டு, அதனாலே பல்வேறு விதமான குறைபாடுகள் ஏற்படுவது அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. அப்படியிருக்கிற காரணத்தினாலே தான், நீண்ட தூரப் பேருந்துகள் அரசின் சார்பிலோ, சுற்றுலா வாரியத்தின் சார்பிலோ, அல்லது போக்குவரத்துக் கழகங்களின் சார்பிலோ நடத்தப்படுகின்ற விடுதிகளுக்கு முன்னாலேதான் நிறுத்தப்பட வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. நீண்ட தூரப் பேருந்துகளில் வரக்கூடிய நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள், அந்த விதிகளை மீறி வேறு தனியாருடைய உணவு விடுதிகளில் சலுகைகளைப் பெறுவதற்கு யாரேனும் ஆங்காங்கே நிறுத்தினார்கள் என்று சொன்னால், அந்தப் புகார்களைத் தயவுசெய்து அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது எல்லாக் கழகங்களிலும் கழக ஊழியர்களுக்கான சிற்றுண்டிச் சாலைகள் இருக்கின்றன. அங்கே சமையல் செய்வதற்குத் தேர்ச்சி பெற்றவர்கள் சமையல் நுணுக்கம் தெரிந்தவர்கள் கூட, எல்லா போக்கு

1990 ஆகஸ்ட் 23]

வரத்துக் கழகங்களிலும் அமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள். எனவே, அவர்களுடைய பணியைப் பயன் படுத்தி—சேவையினைப் பயன்படுத்தி, கழகங்களால், நடத்தப்படுகிற சாலையோர சிற்றுண்டி விடுதிகளையும், கழகங்களினாலேயே நேரடியாக நடத்தி, பயணிகளுக்கு தரமான, நியாயமான விலையிலான உணவு வகைகளைப் பரிமாறுவதற்கு அரசு துரித நடவடிக்கை எடுக்குமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் பணியாற்றக் கூடிய தொழிலகங்கள்— 'டெப்போக்களில்' இருக்கக் கூடிய கேண்டீன்களில்தான், சமையல் செய்யக் கூடிய நபர்களை வைத்து, தொழிலாளர் களுக்காக உணவுகள் தயாரிக்கப்பட்டு, வழங்கப்பட்டு வருகின்றன. அவர்கள் சாலையோரச் சிற்றுண்டி விடுதி களில் பணியாற்றுவது என்று சொன்னால், தொழிலாளர் களுக்கான சேவைகள் செய்வதிலே குந்தகம் ஏற்படும். எனவேதான், அது நடைமுறைக்கு ஒத்து வராது என்பதை அரசு உணர்ந்திருக்கிறது.

திரு. வ. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பாலான சாலையோர உணவு விடுதிகள், தனியாரால் நடத்தப்படுகின்றன. தனியார்கள் தருகிற அந்தச் சலுகைகளை அனுபவிக்கத்தான் ஓட்டுநர்களும், நடத்துநர்களும் பேருந்துகளை அங்கே நிறுத்துகிறார்கள். எனவே, இவற்றைத் தவிர்ப்பதற்காக, அந்தந்த மாவட்டங் களிலே முக்கியமான இடங்களில், எந்த மாவட்டத்தில் எந்தப் போக்குவரத்துக் கழகம் இருக்கிறதோ, அந்தப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக சாலையோரச் சிற்றுண்டி விடுதிகளை ஏற்படுத்தி, தனியார்கள் தருகின்ற அந்தச் சலுகைகளை, கழகங்கள் நடத்துகின்ற சிற்றுண்டி விடுதி களிலும் கிடைப்பதற்கு ஓட்டுநர்களுக்கும், நடத்துநர் களுக்கும் கிடைக்க ஏற்பாடு செய்தால், இப்படிப்பட்ட பிரச்சினைகள் தவிர்க்கப்படலாம். எனவே, இந்த ஆலோசனையைக் கருத்தில் கொண்டு, நம்முடைய அரசு அவ்வாறு அமைக்க முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

9-10 மணி

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னக் கருத்தை மையமாக வைத்துத் தான் போக்குரத்துக் கழகங்கள், ஆங்காங்கே சாலையோர சிற்றுண்டி விடுதிகளை உருவாக்கியிருக்கின்றன. குறிப்பாக, தென் மாவட்டங்களுக்குச் செல்லக்கூடிய பேருந்துகளில் எல்லா உறுப்பினர்களுக்கும் அனுபவம்

இருக்கும். செங்கல்பட்டிற்குப் பக்கத்திலேயும், அதே போல் மாமண்டூரின் சாலையோர வலது பக்கத்திலே இருக்கக் கூடிய சில தனியார்களுடைய உணவு விடுதிக்கு முன்னால் இரவு 9 மணி, 10 மணிக்கு அந்தப் பேருந்துகளை அங்கே நிறுத்தி, செல்லக்கூடிய பயணிகள் வேறு எங்குமே செல்ல முடியாது, நடுக்காட்டிற்குள்ளே இருக்கின்ற மாதிரி ஒரு அமைப்பு. ஆகவே, அவர்கள் கொடுக்கின்ற உணவைத் தான் சாப்பிட்டுத் தீர வேண்டும். போடுகின்ற பில்லுக் குண்டான பணத்தைக் கொடுக்க வேண்டும் என்ற ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டதற்குப் பின்னாலே தான் அரசு இத்தகைய மோசமான நிலைமையை உணர்ந்து பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் ஒரு நல்ல, தமிழ் நாட்டிற்கே எடுத்துக் காட்டாக இருக்கின்ற வகையில் ஒரு அருமையான சிற்றுண்டி விடுதியை, மோட்டலை உருவாக்கி இன்றைய தினம் அது சிறப்பான முறையிலே பணியாற்றி வருகின்றது. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் நீண்ட தூரப் பயணிகளுக்கு வசதி ஏற்படுத்துகின்ற வகையில் மேலும் எங்கெங்கு இத்தகைய விடுதிகள் அமைக்க வேண்டும் என்பதை ஆராய்ந்து அந்தந்தப் போக்குவரத்துக் கழகங்கள் உருவாக்கி நடத்துவதற்கான திட்டத்தை அரசு பரிசீலனை செய்யும்.

முறைசாராக் கல்வித் திட்டம்.

*5215—திரு. ப. முத்துச்சாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இதுவரை இயங்கி வரும் முறை சாராக் கல்வித் திட்டத்தில் கல்வி கற்றுத் தரப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க ஒன்றிய அளவில் பொதுத் தேர்வு வைத்து சரியாகக் கற்றுக் கொடுக்காதவர்களைக் கண்டறிந்து உடன் நீக்கி வேறொருவரை நியமித்து ஒழுங்குபடுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, வயது வந்தோர் கல்வித் திட்டத்தின் கீழ் சரியாகக் கற்றுத் தராத ஊக்குநர்கள் அவ்வப்போது நீக்கப்பட்டு புதிதாக நல்ல ஊக்குநர்கள் நியமிக்கப்பட்டு, போதனா முறை ஒழுங்குபடுத்தப்படுகிறது. பொதுத் தேர்வு, ஒன்றிய அளவில் ஏற்பாடு செய்தால் இந்த வயது வந்தோர் கல்வித் திட்டத்தில் கற்போர்கள் தேர்வு எழுத அச்சப்பட்டு கல்வி கற்பதையே விட்டு விடக்கூடும் என்று இந்தத் துறை கருதுகிறது.